**இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்திட்டம் - 2015**

இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்திட்டத்தின் (எச்ஈரீசீ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 4686–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உயர் கல்வி அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். சமத்துவமான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி தேவைகள் வரிசையில் தரமான உயர் கல்விச் சேவைகளை வழங்குவதற்கு பெறுநர்களின் உயர் கல்வி முறைமை, நிறுவனங்கள் மற்றும் மனித வளங்கள் என்பவற்றின் இயலுமையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். உயர் கல்வித் துறைக்கான நிறுவனமயப்படுத்திய விதிமுறைகள், கற்பித்தல் மற்றும் கற்றலின் பொருத்தத்தன்மை மற்றும் தரத்தினை மேம்படுத்துதல், மாற்று உயர்கல்வியை விரிவாக்கல் மற்றும் வலுப்படுத்தல் மற்றும் மனிதவள அபிவிருத்தி, கண்காணிப்பு, மதிப்பாய்வு, ஆய்வுகள், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் ஆகிய நான்கு பிரதான கூறுகளை செயற்திட்டம் கொண்டுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,930 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 40 மில்லியனாக உள்ளதுடன் மொத்த கிரயமும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 நவம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2016 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 காசுப்பாய்ச்சல் கூற்றினை சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்காக காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிப்பதற்கு பதிலாக செயற்திட்டத்தின் முழுக் காலப்பகுதியின் போது செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களிற்காக செயற்திட்டத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 40.00 | 4,930.06 | 1,908.58 | 10.51 | 1,365.03 | 33.25 | 4,312.83 |
| **மொத்தம்** | **40.00** | **4,930.06** | **1,908.58** | **10.51** | **1,365.03** | **33.25** | **4,312.83** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீட்டில் 83 சதவீதம் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு கூறுகள் ரீதியாக நிதிகளின் பயன்பாடு 55 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சிலிருந்தது. மேலும் உயர் கல்வித் துறைக்கான நிறுவனமயப்படுத்திய விதிமுறைகளின் கூறின் கீழ் செய்யப்பட்ட ரூபா 83.16 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 45.89 மில்லியன் தொகையான நிதிகளின் பயன்பாடு தொடர்பில் மந்தமான செயன்முன்னேற்றம் காட்டப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

04 பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான பௌதீக செயன்முன்னேற்றத்தில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டம் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்காக பல்கலைக்கழக மாணவர்களிற்கான படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியிருந்தது. ஆங்கில மொழிக்கான படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 29,376 மாணவர்களும் தகவல் தொழில்நுட்பத்திற்கான படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 24,688 மாணவர்களும் பதிவுசெய்திருந்த போதிலும் ஆங்கில மொழிக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் 3,330 மாணவர்களும் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் 541 மாணவர்களும் மாத்திரமே திருப்திகரமாக படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்திருந்தனர்.

(ஆ) செயற்திட்டத்தின் மாற்று உயர்கல்வியை விரிவாக்கல் மற்றும் வலுப்படுத்தல் கூறின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கான தர அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ நிலையத்திற்கான கட்டிட நிர்மாண வேலைகள், 2016 மே 31 இலும் நிர்மாண வேலைகளின் 60 சதவீதமே பூர்த்தி செய்ப்பட்டிருந்தது. கிடைத்த தகவல்களின் படி, கட்டிட நிர்மாண வேலைகள் 2016 யூன் 30 ஆம் திகதியில் மாத்திரமே பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

(இ) 2015 திசெம்பர் 31 இற்கு முன்னர் மற்றும் 2016 யூன் 30 வரை நீடிக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா பதவியணியினரின் 240 அங்கத்தவர்களின் பட்டப்பின் படிப்புகளை பூர்த்திசெய்வதற்கு ரூபா 366.86 மில்லியன் தொகையான மானியங்கள் வழங்கப்படடிருந்தன. எவ்வாறாயினும் ரூபா 16.83 மில்லியன் கூட்டுத்தொகையான மானியங்களை பெற்ற உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் 04 மானியம் பெறுநர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் 10 மானியம் பெறுநர்கள் 2016 மே 31 இல் உள்ளவாறு அவர்களுடைய படிப்புக்களை பூர்த்திசெய்திருக்கவில்லை.

(ஈ) உயர் கலவித் துறைக்கான நிறுவனமயப்படுத்திய விதிமுறைகளின் கூறின் கீழ் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் அச்சிட்டு விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட "இலங்கை தகுதிகள் கட்டமைப்பு" இன் வெளியீடு 2015 திசெம்பர் 31 இலும் பல்கலைக்கழகங்களிற்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

2014 செப்தெம்பர் 15 இலிருந்து தற்போதைய செயற்திட்டப் பணிப்பாளரிற்கு அறிவுரை வழங்க செயற்திட்டத்தின் மதியுரைஞராக முன்னாள் செயற்திட்டப் பணிப்பாளார் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் மூன்று மாத காலத்திற்காக ரூபா 180,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 நிதிக் கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள்**

பொது நிர்வாக அமைச்சின் 2010 யூன் 07 ஆம் திகதிய 9/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பெற்றோல் வாகனமொன்றிற்காக ஒரு கிலோமீற்றரிற்கு ரூபா 29.25 மற்றும் டீசல் வாகனமொன்றிற்கு ஒரு கிலோமீற்றரிற்கு ரூபா 24.50 விலைவீதத்தில் செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களிற்கான போக்குவரத்துப் படிகள் வழங்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் உரிய அலுவலர்களிற்கு ரூபா 80,366 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.5 மேலதிகக் கொடுப்பனவுகள்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் ஈடுபட்டிராத பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு சேவைகள் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்த செயற்திட்ட உதவியாளர், வணிக அபிவிருத்தி உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோரிற்காக செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 10.27 மில்லியன் கூட்டுத் தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அத்தகைய பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் நிலைமையில் உள்ளடக்கப்படவில்லை.